MISSION PRESS 1840
PONDICHERRY

# சர்வவியாபி

SARVA VIABI

ESTD:1.3.1907
(Year-113)

01-11-2020 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | சார்வரி வருடம் (ஐப்பசி 16) | வருட சந்தா ₹ 150 தனிப்பிரதி ₹ 6

புத்தகம் 57 | இதழ் 43 பக்கம்-12 | e-mail:missionpress48@gmail.com e-mail:missionpress48@yahoo.com | Ph: 0413/ 2334360

ஆசிரியர் : பேரருள்திரு. ஆ. அருளானந்தம்
துணை ஆசிரியர் : அருள்திரு. இர.ஜெயந்த் ராயன்

## இயேசுவின் படிப்பினைகளின் மூலைக் கல்லாக அன்பே இருந்தது



கடவுள் மீதும் நமக்கு அடுத்திருப்பவர் மீதும் நாம் கொள்ளும் அன்பே, நம் கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படைக்கூறு, என இஞ்ஞாயிறு மூவேளை செப உரையில் எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

நண்பகல் மூவேளை செப உரையை முன்னிட்டு வத்திக்கான் புனித பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் குழுமியிருந்த திருப்பயணிகளுக்கு தன் கருத்துக்களை வழங்கிய திருத்தந்தை, இயேசுவின் படிப்பினைகளின் மூலைக்கல்லாக அன்பே இருந்தது என்றார்.

இயேசுவைச் சோதிக்கும் நோக்கத்துடன், திருச்சட்ட அறிஞர் ஒருவர், திருச்சட்ட நூ-ல் தலைசிறந்த கட்டளை எது? என கேள்வி தொடுத்ததையும், அதற்கு இயேசு, ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு செலுத்துவதும், நமக்கு அடுத்திருப்பவர் மீது அன்பு செலுத்துவதுமே அனைத்திற்கும் அடிப்படை என கூறியதையும் சுட்டிக்காட்டிய திருத்தந்தை, அடிபணிய வைக்கும் சட்டங்களால் அல்ல, மாறாக அன்பை அடிப்படையாகக் கொண்டு செயல்படுவதன் வழியாகவே, நன்னெறி, மற்றும் ஆன்மீக வாழ்வு அமைகிறது. கட்டாயப்படுத்தப்பட்ட கீழ்ப்படித-ன் வழியாக, நன்னெறி மற்றும் ஆன்மீக வாழ்வைக் கட்டி எழுப்ப முடியாது. மாறாக அன்பை அடிப்படையாகக் கொண்டதாக அது இருக்க வேண்டும் எனவும், இரண்டாவது கூறாக கடவுள்மீதும் நமக்கு அடுத்திருப்பவர் மீதும் கொள்ளும் அன்பு, ஒன்றுக்கொன்று பிரிக்கமுடியாதது என்பதையும் வ-யுறுத்திக் கூறியத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இறைவன் மீது நாம் கொண்டிருக்கும் அன்பு அடுத்தவர் மீது நாம் காட்டும் அன்பில் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

திருச்சட்ட நூல் முழுமைக்கும் இறைவாக்கு நூல்களுக்கும் அடிப்படையாக அமைவது, இறைவன் மீதும் நமக்கு அடுத்திருப்பவர் மீதும் நாம் காட்டும் அன்பேயாகும் என இயேசு கூறியது இறைவன் நமக்கு வழங்கியுள்ள அனைத்து நன்னெறி நெறிமுறைகளுடன் தொடர்புடையது என, மேலும் எடுத்துரைத்தார். கடவுள் மீது நாம் கொண்டுள்ள அன்பு, செபங்களில், குறிப்பாக, வழிபாடுகளின் வழி வெளிப்படுத்தப்படுவதுபோல், அடுத்திருப்பவர் மீது நாம் கொண்டுள்ள அன்பு, அருகாமை, செவிமடுத்தல், மற்றவர் மீது அக்கறை போன்றவைகளை உள்ளடக்கிய உடன்பிறந்த அன்பில் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்ற அழைப்பையும் முன்வைத்தார். நாம் மனம் தளர்ந்துவிடாமல் செயல்பட, இறை இரக்கம் நமக்கு உதவிபுரிகிறது. என்பதை எடுத்துரைத்த திருத்தந்தை, நற்செய்தியில் நாம் தினமும் தொடர்ந்து வாழ இறைவன் நமக்கு அழைப்பு விடுக்கிறார்.

## கோவிட் – 19ல் நவம்பர் மாதம் முழுவதும் பரிபூரண பலன்

இறந்தோருக்கென நவம்பர் மாதத்தின் குறிப்பிட்ட நாள்களில் வழங்கப்பட்டு வந்த பரிபூரண பலன்கள், தற்போதைய கோவிட்-19 கொள்ளை நோயால், இவ்வாண்டு நவம்பர் மாதம் முழுவதும் வழங்கப்படும் என்று Apostolic Penitentiary எனப்படும், திருப்பீட மனச்சாட்சி பேராயம் அறிவித்துள்ளது.

நவம்பர் மாதத்தில் வழங்கப்படும் பரிபூரண பலன்கள் பற்றி, அக்டோபர் 23, இவ்வெள்ளியன்று விதிமுறைகளை வெளியிட்ட, திருப்பீட மனச்சாட்சி பேராயத்தின் தலைவர் கர்தினால் Mauro Piacenza அவர்கள், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் சிறப்பு ஆணையின்படி இவ்வாண்டு நவம்பர் மாதப் பரிபூரண பலன்கள் பற்றி, இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார். கல்லறைகளை நேரடியாகவும், மனத்தளவிலும் சந்தித்து இறந்தோருக்காகச் செபிக்கும் அனைவருக்கும், பொதுவாக நவம்பர் முதல் தேதியி-ருந்து எட்டாம் தேதி வரை வழங்கப்படும் பரிபூரண பலன்கள், தற்போதைய கொள்ளைநோயால், வருகிற நவம்பர் மாதம் முழுவதும் வழங்கப்படுகின்றன என்று கர்தினால் அவர்கள் அறிவித்துள்ளார்.

வயது முதிர்ந்தோர், நோயாளிகள், மற்றும் கடுமையான காரணங்களால் கல்லறைகளைச் சந்திக்க இயலாதவர்கள், பரிபூரண பலன்களைப் பெறுவதற்குரிய விதிமுறைகளை தங்களின் இடங்களில் இருந்துகொண்டே நிறைவேற்றி ஆன்மீக அளவில் மற்ற விசுவாசிகளோடு இணைந்தால், இந்தப் பலன்களைப் பெறலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த இறையருளை எளிதாகப் பெறுவதற்கு உதவும் வகையில் அருள்பணியாளர்கள், மனத்தாராளத்துடன், ஒப்புரவு அருளடையாளத்தை நிறைவேற்றி, நற்கருணை வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ள கர்தினால் அவர்கள், இறந்தோர் நினைவு நாளான நவம்பர் 2ம் தேதி, அருள்பணியாளர்கள் மூன்று திருப்ப-களை நிறைவேற்றுமாறும் வ-யுறுத்தியுள்ளார்.

ஆசிரியர் பேனா...

# "இலவசமுங்கோ இலவசம்"

இன்றைக்கு உலக அரசுகள் முழுவதும் கொரோனா அரசியல் செய்து கொண்டிருக்கின்றன. எதற்கெடுத்தாலும் கொரோனா பெருந்தொற்று காரணம் காட்டப்படுகிறது. அரசியல், சமூகம், பொருளாதாரம், ஆன்மிகம் என்று கொரோனாவை வைத்து செய்யப்படுகின்ற அரசியல் ஏராளம். கொரோனா நோய்த் தாக்கம் ஒருபுறம் அரசியலாக்கப்படுகிறது. மறுபுறம் உலக நாடுகள் அந்நோய்க்கான தீர்வாகத் தடுப்பு மருந்துகள் தயாரிக்கும் முனைப்பில் செய்யப்படுகின்ற அரசியல் போன்றவை யாவும் இன்றைய எதார்த்தங்கள் ஆகும்.

முன்பு கூறப்பட்ட ஒரு கூற்று நினைவிற்கு வருகிறது. எந்த நாடு கொரோனா தடுப்பு மருந்தினை கண்டுபிடிக்கிறதோ, அந்த நாடுதான் அடுத்த வல்லரசாக இந்த உலகில் பல ஆண்டுகள் கோலோச்சும் என்று. எனவே இம்மருந்தை கண்டுபிடிக்க ஒவ்வொரு நாடும் காட்டும் முனைப்பில் மக்கள் நலன் இருக்கிறதோ இல்லையோ ஆதிக்கத்தின் பேராசை உள்ளடங்கியிருக்கிறது என்பது நிதர்சனமான உண்மை.

இன்று மக்கள் நலன், இலவசம் என்ற பெயரில் கொச்சைப்படுத்தப்படுகிறது. மக்களுடைய அடிப்படைத் தேவைகள் எவ்வளவோ பூர்த்தி செய்யப்படாமல் இருக்கின்றபோது, தேர்தல் வாக்குறுதியாக "கொரோனா தடுப்பு மருந்து அனைவருக்கும் இலவசம்" என்று அறிவிக்கப்படுவதும், இதைப் பார்த்து ஒரு சில மாநிலங்கள் கொரோனா தடுப்பு மருந்து அனைவருக்கும் இலவசம் என்று அறிவிப்பதும் மக்களை முட்டாள்களாக்குகின்ற செயல் அல்லவா. மருந்தே கண்டுபிடிக்க முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கின்ற சூழலில் "தடுப்பு மருந்து இலவசம்" என்பது கேலிக் கூத்தாக உள்ளது.

இது எப்படி எண்ணத் தோன்றுகிறது என்றால், பெற்ற தாய் தன் குழந்தையிடம் "உனக்கு தாய்ப் பால் இலவசம்" என்று கூறுவதுபோல் உள்ளது. அரசின் கடமை நாட்டு மக்களின் தேவைகளை உணர்ந்து பணியாற்றுவது. ஆனால், இன்று இலவசம் என்ற பெயரில் மனித மாண்பு சுரண்டப்படுவது வேதனைக்கு உரியதாய் உள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கத்தை விடவும், இன்று சமூகம் சார்ந்த ஆரோக்கியம், மனித உரிமைகளைப் பாதுகாத்தல், மனிதாபிமான உதவிகளை எளிதாக்குதல் மற்றும் பொது நலன் சார்ந்த முன்னெடுப்புக்கள், ஆரோக்கியமான வாழ்வுக்கான தாயரிப்பு என்று எதையும் பிரதிபலிக்காமல் இன்று இலவச அரசியல் மட்டுமே முன்னிறுத்தப்படுவது, மனித மாண்பு சிதைக்கப்படுகிறது என்பதை வேதனையோடு ஏற்றுக்கொள்ளவேண்டிய கட்டாயத்திற்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

"**தடுப்பூசி தேசியவாதம்**" கொரோனா தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட இன்னும் காலம் ஆகும் என்று சொல்லப்பட்டு வருகின்ற சூழலில், அதனுடைய சர்வதேசத் தேவை அதிகரித்திருக்கின்ற சூழலில், சிலநாடுகள் இப்போதே அம்மருந்தின் மீது பில்லியன் டாலர் அளவு முதலீடு செய்திருப்பது, முன் பதிவு செய்வது இத்தடுப்பு மருந்தின் விலை மற்றும் அவைகளுக்கான கேள்விகளை அதிகமாக உருவாக்கியிருக்கின்றது. இப்படிப்பட்ட ஆரோக்கியமற்றச் சூழல் உருவாக்கிய வார்த்தைதான் "தடுப்பூசி தேசியவாதம்." வாணிகம் என்ற பின்புலத்தில் உலக நாடுகள் முன்னெடுத்திருக்கும் இச்செயல் மக்களின் வாழ்வைச் சீரழிக்கக்கூடிய மிகப்பெரிய காரணியாக உருவெடுக்கும் என்பது வேதனைக்குரிய ஒன்று.

எனவே இம்மருந்து தயாரிப்பும், அவை மக்களை சென்றடைவதும் அரசியல் அதிகாரப் போக்கை உள்ளடக்கியிருக்கிறது என்பதை நாம் உணர வேண்டும். இந்த அதிகார அரசியல் கட்டமைக்கும் ஒவ்வொன்றையும் வளர்ச்சி குறைந்த, சுகாதார மேம்பாடு இல்லாத, பொருளாதாரத்தில் வலிமையற்ற நாடுகள் வேறு வழியின்றி ஏற்றுக்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. ஆதிக்க அரசுகள் வடிவமைக்கும் கட்டமைப்பை அப்படியே ஏற்றுக் கொள்ளும் நிலைக்கு இன்று பலநாடுகள் தள்ளப்பட்டுள்ளன என்பதே நிதர்சனமான உண்மை. இதனால் வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கு ஏற்படப்போகும், ஏற்பட்டுக்கொண்டிருக்கும் பொருளாதாரச் சேதம் மிக வலிமையானதாகவே இருக்கும்.

இந்த மூர்க்கத்தனமானஅரசியல் இக் கொரோனா தொற்று, தடுப்பு மருந்து மற்றும் இதிலிருந்து பாதுகாக்க எடுக்கும் ஒவ்வொரு முயற்சியையும் இலவசம் என்கிற பெயரில் கொச்சைப் படுத்துகின்ற அளவிற்கு கொண்டு சென்றிருக்கிறது. மக்கள் நலன் சார்ந்த அணுகுமுறை மாறிப்போய் அரசியல் அணுகு முறையாகவும், இதை வைத்து ஆட்சியைப் பிடிக்க உதவும் சூழலாகவும் இச்சூழ்நிலையை மாற்றியிருப்பது அதிகார அரசியலின் ஆதிக்கம் இச்சமுதாயத்தை ஆட்டிப் படைப்பதை வெளிப்படையாகக் காட்டுகின்றது.

**கொடையாகவே பெற்றீர்கள், கொடையாகவே வழங்குங்கள் (மத்.10:8).**

அரசியலோ, ஆன்மிகமோ, சமூகப்பணியோ மேற்கூறியச் சிந்தனையோடு செயலாக்கம் பெறுதல் வேண்டும். இன்றைய உலகில் திருச்சபை எண் 75. கூறுகிறது, "தனி நபர்களின் அல்லது சமூகக் குழுக்களின் உரிமைகளைப் புண்படுத்தக் கூடிய சர்வாதிகார அல்லது ஏகாதிபத்திய முறைகளைக் கைக்கொள்ளும் அரசு மனிதத் தன்மையற்றது." இலவசம் என்கிற பெயரில் கொச்சைப்படுத்தப்படும் மனித சமுதாயத்திற்கு இயேசு கிறிஸ்துவின் "கொடையாகவே பெற்றீர்கள், கொடையாகவே வழங்குங்கள்" என்ற கூற்று மெய்ப்பிக்கப்பட வேண்டும்.

அரசியல் பணியோ, ஆன்மிகப் பணியோ அல்லது சமூகம் சார்ந்த எந்த ஒரு பணியோ அது மக்கள் நலம் சார்ந்து அமையும் பட்சத்தில் அதனின் மேன்மை என்றும் வெளிப்படும். இதில் பணியாற்றுவோர் நலன் முதன்மைப்படுத்தப்படுமாயின் அதிகாரப் போக்கும், சுரண்டலும், சுயநலமும், ஆதிக்கம் செலுத்தும் மனநிலையுமே முதன்மைப் படுத்தப்படும். விரும்பி ஏற்கப்பட்டிருக்கிற மக்களுக்கான பணிகள், அதை ஏற்றிருக்கிற அரசியல்வாதிகள், ஆன்மிகவாதிகள் மற்றும் சமூகச் சிந்தனையாளர்கள் தாங்கள் பெற்றுக்கொண்ட கொடைகளை கொடையாக வழங்க முன்வருதல் வேண்டும். இதில் விளம்பரங்களும், ஆதாயங்களும், செய்யப்படுகின்ற அரசியலும் தேவையற்றவை என்பதை உணருதல் வேண்டும்.

இலவசம் என்று மக்களை மழுங்கடிப்பதை விட்டுவிட்டு, இது மக்களின் உரிமை அவர்களுக்குப் பணியாற்றுவது என் கடமை என்று மக்களின் மாண்பைப் பாதுகாக்க ஒவ்வொருவரும் புறப்படுவோம்.

இறைவனிடம் இலவசமாய் பெற்றதை இலவசமாய் வழங்குவோம்.

- துணை ஆசிரியர்: அருட்பணி ஜெயந்த் ராயன்



வாரச் சிந்தனை

# "மங்களகரமான வாழ்க்கை"



பொதுக்காலம் 32-ம் ஞாயிறு 08-11-2020

சாஞா.6:12-16 1தெச.4:13-18 மத்.25:1-13

அருள்திரு. P. லூர்து ஜெயராஜ்,
துணை முதல்வர், பெத்தி செமினேர் மேல்நிலைப் பள்ளி, புதுவை.

நமது குடும்பங்களில், நிறுவனங்களில் மற்றும் சமுதாயத்தில் நாம் பல்வேறு சுபநிகழ்ச்சிகள் மற்றும் திருவிழாக்களை கொண்டாடுகின்றோம். இந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் நமக்கு குதூகலமாக, மங்களகரமாக அமைகின்றன. மற்றும் மகிழ்ச்சியையும் அளிக்கின்றன. இதற்கு முக்கியமான முதல் காரணம், நமக்கு விடுமுறை கிடைக்கின்றது. இரண்டாவது நமது குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஒன்றுகூடி இணைந்து வருகின்ற தருணம். பல மாதங்களாக, பல வருடங்களாக சந்திக்காமல் இருந்தாலும் நாம் அனைவரும் ஒருவரையொருவர் சந்திப்பதற்கு இந்த விழாக்கள் ஒரு காரணமாய் அமைகின்றன. அதுபோலவே நம் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட வாழ்க்கையும் மங்களகரமாக, மகிழ்ச்சியாக, குதூகலமாக இருக்க இன்றைய ஞாயிறு இறைவார்த்தை வழிபாடு நமக்கு பல்வேறு வழிகாட்டுதல்களை அளிக்கின்றன. அவைகளைத் தியானிப்போம், நம் வாழ்வில் செயல்படுத்துவோம்.

**விழிப்பாயிருங்கள்:** ஆண்டவரின் நாளோ, வேளையோ எப்பொழுது வரும் என்று யாருக்குமே தெரியாது. எனவே நாம் எப்பொழுதும் விழிப்பாயிருக்க வேண்டும் என்னும் கருத்தை வ-யுறுத்த இயேசு கூறிய பத்துத் தோழியர் உவமையே இன்றைய நற்செய்தி வாசகம். மத்தேயு நற்செய்தியில் மட்டுமே காணப்படுகின்ற இந்த உவமையை நன்கு புரிந்துகொள்ள அக்கால யூத திருமண பழக்கம் பற்றி அறிந்துகொள்வது அவசியம். முதல் கட்டம் திருமண ஒப்பந்தம் என்று அழைக்கப்பட்டது. மணமகனின் தந்தை, மணமகளின் தந்தையின் வீட்டுக்குச் சென்று மணமகளிடமிருந்து திருமண ஒப்பந்த ஏட்டையும் வரதட்சணையையும் பெற்றுக்கொள்வார். மணமகள் தன் தந்தையின் வீட்டிலேயே ஏறத்தாழ ஒரு வருடம் தொடர்ந்து தங்கியிருந்த பின்னரே மணமகனின் வீட்டிற்குச் சென்று இல்லற வாழ்க்கையை நடத்துவார். இன்றைய நற்செய்தியில் இயேசு கூறிய உவமையில் மணமகன் மணப்பெண்ணின் வீட்டில் தன் வருங்கால மாமனாரைச் சந்தித்து அவரோடு திருமண ஏற்பாட்டிற்கான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருக்கின்றார். பத்து தோழியர்கள் மணமகனின் வருகைக்காக காத்திருக்கன்றனர். பேச்சுவார்த்தை நன்முறையில் முடிந்ததும், இதோ மணமகன் வருகிறார் என்று அறிவிக்கப்படுகிறது. திருமண ஊர்வலம் மணமக்களோடு புறப்பட்டு மணமகனின் வீட்டை நோக்கிச் செல்வதற்கு தயாராகின்றது. ஊர்வலத்தில் கலந்துகொள்ள வந்த பத்துபேரில் ஐவர் மட்டுமே தயாராக உள்ளனர். மற்ற ஐவரும் போதிய எண்ணெய் இல்லாததால் தங்கள் விளக்குகளை ஏற்ற இயலாதிருக்கிறார்கள். அவர்கள் எண்ணெய் வாங்கச் சென்ற நேரத்தில் மணமகனும் வெளியே வருகிறார், ஊர்வலம் புறப்படுகிறன்றது. விழிப்பாயிருந்து ஆயத்தமாய் இருந்தவர்கள் மட்டுமே திருமண மண்டபத்திற்குச் சென்று கொண்டாட்டத்தில் கலந்து கொள்கிறார்கள். தாமதமாக வந்தவர்கள் ஏமாற்றத்தோடு வெளியே நிற்கிறார்கள். நாமும் நம்முடைய வாழ்க்கையில் நேரத்தையும் காலத்தையும் சரியாகப் பயன்படுத்தி விழிப்பாகச் செயல்படவேண்டும். வாழ்வில் எதை இழந்தாலும் பெற்று விடலாம் நேரத்தையும் காலத்தையும் தவிர. நமது இறப்புகூட எப்பொழுது வரும் என்று யாருக்குமே தெரியாது. எனவே எல்லாச் சூழ்நிலையிலும் விழிப்பாயிருந்து தயாராக இருக்க வேண்டும்.

**முன்மதி உடையவராய்... :** முன்மதி என்பது இறையாட்சியின் ஒரு மதிப்பீடு. இறையாட்சிக்கு உட்படுவோர் அந்தப் பண்பைப் பெற்றிருக்க வேண்டும். மேலும் முன்மதி என்பது அறிவாற்றல், ஞானம், எதிர்காலத்தைப்பற்றிய சிந்தனை, திட்டமிடுதல் போன்றவற்றின் கலவை ஆகும். எப்போதும் தயாராக இருக்கின்ற ஓர் உக்தி. இயேசுவின் சீடர்கள் (நாம்) முன்மதி உடையவராய் இருக்க வேண்டும் என்பதற்காகவே இன்றைய நற்செய்தியில் இயேசு பத்து தோழியர் உவமையைக் கூறியிருக்கின்றார். யார் அறிவாளி? யார் அறிவி-? என்பதை இயேசு ஏற்கனவே நற்செய்தியில் விளக்கியிருக்கின்றார். அதாவது, முன்மதியோடு உறுதியான அடித்தளம் இட்டு வீடுகட்டுபவர் அறிவாளி; ஆனால் உறுதியற்ற மணல்மீது வீடுகட்டுபவர் அறிவி- (மத்.7:24-27). அதுபோல முன்மதியோடு கைகளில் போதுமான அளவு எண்ணெய் எடுத்துச்சென்று அறிவோடு செயல்பட்ட ஐந்து தோழியர் இயேசுவின் சொற்களைக் கேட்டு அவற்றை வாழ்வில் கடைபிடிப்போருக்கு ஒப்பாவர். கைகளில் விளக்குகளை மட்டும் எடுத்துச் சென்ற மற்ற தோழியரோ நற்செயல் புரியாதோருக்கு ஒப்பாவர். நமது வாழ்வையும் சிறிது ஆய்வு செய்து இறையாட்சிப் பார்வையில் நாம் முன்மதி உடையவராய் இருக்கிறோமா என்று சிந்தித்துப் பார்ப்போம். ஆன்மீகப் பார்வையில் நம் நிலை வாழ்வுக்குத் தேவையான செபம், பகிர்வு, அறப்பணிகள், பிறரன்பு சேவைகள் இவற்றைச் சேமித்து வைப்போம். எந்நாளும் முன்மதியுடையவராய் வாழ்வோம்.

**விளக்குகள் எரிந்துகொண்டு:** பத்து தோழியரும் எழுந்து தங்கள் விளக்குகளை ஒழுங்குபடுத்துகின்றனர். எரியும் விளக்கின் மூலம் வரும் வெளிச்சம் நமக்கு பல விதங்களில் உதவுகின்றது. எரியும் திரி வெந்து தன்னையே வேகவைத்துக் கொள்கின்றது. விளக்கில் இருக்கும் எண்ணெய் தன்னையே இழந்து ப-யாகிறது. வெளியி-ருந்து விளக்கைப் பார்த்துவிட்டு எண்ணெய் இருக்கிறதா என்பதை அறிய முடியாது, ஆனால் வெளிச்சத்தைப் பார்த்து அறிய முடியும். அதுபோல நாமும் சுடர்விடும் ஒளியாக வாழ்ந்து நம்மையே பிறருக்காக தியாகம் செய்து, அர்ப்பணித்து வாழ வேண்டும். அதனால்தான் இயேசுவும், உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க. அப்பொழுது அவர்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு உங்கள் விண்ணகத் தந்தையைப் புகழ்வார்கள் (மத்.5-16) என்றார். நம்முடைய பெற்றோர்கள், உடன்பிறந்தவர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் நம் வாழ்க்கை என்னும் விளக்குக்கு எண்ணெய் ஊற்றலாம். ஆனால், விளக்குகள் அணையாமல் எரிந்துகொண்டிருப்பது நம் அனைவரின் கைகளில்தான் உள்ளது.

**எப்பொழுதும் மணமகனோடு :** இன்றைய நற்செய்தியின் உவமையில் வரும் மணமகன் ஆண்டவர் இயேசுவையே குறிக்கின்றது. காலந்தாழ்த்தி வரும் மணமகன் இயேசுவின் இரண்டாவது வருகையின் சின்னம். பத்து தோழியர் அனைவரும் கிறிஸ்தவர்களாகிய நம் ஒவ்வொருவரையும் குறித்துக்காட்டுகின்றது. மணமகனாகிய இயேசுவுடன் நாம் எப்பொழுதும் இருக்கும்போதுதான் நம்முடைய வாழ்வு மங்களகரமாக, மகிழ்ச்சியாக மாறும். நம் ஆன்மீக வாழ்வில் சோர்வுகள், தடுமாற்றங்கள் ஏற்பட்டு இயேசுவோடு இணைந்து வாழாமல் இருப்பதற்கு மிக முக்கிய காரணம் நம்முடைய அலட்சியம். எனவே விசுவாச வாழ்வில் தொய்வு ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். எல்லாவற்றிற்கும் ஒரு முடிவு உண்டு. அது நமது இறப்போ, உலகின் முடிவோ, ஆண்டவரின் வருகையாகவோ இருக்கலாம். மணமகன் (இயேசு) வந்தபோது தயாராயிருந்த தோழியர் மட்டும் அவருடன் மண வீட்டில் நுழைந்தனர். கதவு அடைக்கப்பட்டது. கதவு அடைக்கப்பட்ட பிறகு ஆண்டவரே! ஆண்டவரே! என்று அழைத்தாலும் எந்தவொரு பயனும் இல்லை. அருள் வாழ்வு என்பது மற்றவர்களிடம் சென்று கடன் வாங்கிக் கொள்ளக்கூடியதன்று நம் ஒவ்வொரு நபரின் தனியுடைமை. எனவே மணமகன் இயேசுவோடு எப்பொழுதும் இணைந்து வாழ்வோம். நம் வாழ்க்கை மங்களகரமாக அமையும்.

## கோவி(ட்)ல் வழிபாடு

# திறக்கப்படாத கதவுகள்!!!

22



அருட்திரு.V.S.தோமினிக் சாவியோ,
பங்குதந்தை, பாத்திமாபாளையம்.

**கொரோனா** ஊரடங்கு நமக்குக் கற்றுத் தந்த பாடங்களில் ஒன்று நம் வழிபாடுகளை அர்த்தமுள்ளதாய் மாற்ற வேண்டும் என்பதே. வாடிக்கை, வேடிக்கை, கேளிக்கை, சமூக அநீதி இவற்றை விலக்கும் வழிபாடே அர்த்தமுள்ள வழிபாடு. நம்பிக்கை, அன்பு, எதிர்நோக்கு, சமூக நீதி இவற்றை வளர்க்கும் வழிபாடே கடவுள் விரும்பும் வழிபாடு.

நாம் ஏன் கடவுளை வழிபட வேண்டும் என்று யாராவது என்னைக் கேட்டால், ஒரு வரி பதில் மட்டுமே நான் தருவேன். - **“கதவுகள் திறக்கப்பட வேண்டும்”** என்பதுதான் அந்த ஒரு வரி பதில். அது என்ன கதவுகள் திறக்கப்படுவது?

“*நீதிமான்களின் ஆன்மா கடவுளின் கையில் உள்ளது*” என்கிறது சீராக்கின் ஞானநூல்.

ஆனால் நாம் நீதிமான்களாக மாறுகின்றவரையில் நம் ஆன்மா நம் கையில்தான் உள்ளது. நம் கையில் உள்ள இந்த ஆன்மா கடவுளை அடையத் துடித்துக்கொண்டிருப்பது ஒருபுறம் இருக்க, நம் ஆன்மா கடவுளை அடைவதற்குதான் பல கதவுகள் திறக்கப்பட வேண்டியுள்ளது. நம் ஆன்மாவை கடவுளிடமிருந்து மறைத்து வைத்திருக்கின்ற பல கதவுகள் ஒவ்வொன்றாகத் திறக்கப்படுவதே ஒவ்வொரு வழிபாட்டின் நோக்கமாக இருக்க வேண்டும்.

விவிலியத்தின் பழைய ஏற்பாட்டு நூல்களில் கடவுள் மக்களை பலவிதமான பலிகளைத் தமக்குச் செலுத்தும்படி அறிவுறுத்துகின்றார். லேவியர் புத்தகம் முதல் ஏழு அதிகாரங்கள் முதன்மையான 5 பலிகளைப்பற்றி விவரிக்கின்றன.

1. எரிபலிகள், 2. தானியப் படையல், 3. நல்லுறவு பலிகள், 4. பாவக்கழுவாய் பலிகள், 5. குற்றப்பழி நீக்கும் பலிகள். (லேவியர்: 1-7).

இந்தப் பலிகள் அனைத்தும் கடவுள் உண்பதற்காக அல்ல. மனிதரின் பாவங்களால், குற்றங்களால் கோபமான கடவுளை சாந்தப்படுத்தவும் அல்ல. இந்தப் பலிகள் அனைத்தும் மனிதனுக்கும் கடவுளுக்கும் இடையே இருக்கும் உறவைப் புதுப்பிக்கவே. அதாவது, மனித ஆன்மாவுக்கும் கடவுளுக்கும் இடையே இருந்த பூட்டப்பட்ட கதவுகளைத் திறக்கவே. காலப்போக்கில் பலிகள் செலுத்துவதன் உண்மையான நோக்கமான இறை – மனித உறவுக்கான கதவுகள் திறக்கப்படாத தருணத்தில், கடவுள் இந்தப் பலிகளை எல்லாம் வெறுப்பதையும், பலிகளே தமக்குச் செலுத்த வேண்டாம் என்று கட்டளை இடுவதையும் நாம் இறைவாக்கு புத்தகங்களில் பார்க்கின்றோம்.

“எண்ணற்ற உங்கள் பலிகள் எனக்கு எதற்கு?” என்கிறார் ஆண்டவர். “ஆட்டுக்கிடாய்களின் எரிபலிகளும், கொழுத்த விலங்குகளின் கொழுப்பும் எனக்குப் போதுமென்றாகிவிட்டன. காளைகள், ஆட்டுக் குட்டிகள், வெள்ளாட்டுக் கிடாய்கள் இவற்றின் இரத்தத்திலும் எனக்கு நாட்டமில்லை.... இனி, காணிக்கைகளை வீணாகக் கொண்டு வர வேண்டாம். நீங்கள் காட்டும் தூபம் எனக்கு அருவருப்பையேத் தருகின்றது... (எசாயா:1:11-20). நம் ஆன்மாவை கடவுளுக்கு நெருக்கமாய் இட்டுச்செல்லாத பலிகள் வீணானவை என்பதையே கடவுள் இங்கு வெளிப்படுத்துகின்றார்.

“உங்கள் திருவிழாக்களை நான் வெறுத்து அருவருக்கின்றேன். உங்கள் வழிபாட்டுக்கூட்டங்களில் எனக்கு விருப்பமே இல்லை. எரிபலிகளையும் தானியப் படையல்களையும் எனக்கு நீங்கள் செலுத்தினாலும் நான் ஏற்க மாட்டேன். கொழுத்த விலங்குகளை நல்லுறவுப் பலிகளாகச் செலுத்தும்போது நான் ஏறெடுத்தும் பார்க்கமாட்டேன்...” (ஆமோஸ்:5:21-24)

நாம் செலுத்தும் பலிகளும் காணிக்கைகளும் கடவுளின் கோபத்திற்கு உள்ளாவது எப்போது என்பதை ஆமோஸ் இறைவாக்கு மூலம் கடவுள் வெளிப்படுத்துகின்றார். சமுதாயத்தில் அநீதியை விதைத்து விட்டு, ஆலயத்தில் கொழுத்த விலங்குகளைப் பலி செலுத்துவதை கடவுள் வெறுக்கின்றார். அநீதி என்பது நம் ஆன்மாவை கடவுளிடமிருந்து மறைக்கும் பூட்டப்பட்ட கதவு என்பதே ஆமோஸ் இறைவாக்கின் செய்தி. மேலும் (எசாயா:1:10-17, 66:1-3, மீக்கா:6:6-8, எரேமியா:6:18-21, 7:9-10, 22-23, 1சாமு:15:10-24) போன்ற விவிலியப் பகுதிகளைப் படித்தால் நம் வழிபாடுகள் மற்றும் காணிக்கைகள் பூட்டப்பட்ட கதவுகளைத் திறப்பதற்குப் பதிலாக, இன்னும் வலிமையாகப் பூட்டி வைக்கின்றன என்பதை அறியலாம்.

வழிபாடுகள் மற்றும் பலிகளின் உள்ளார்ந்த நோக்கமே நம் ஆன்மாவை கடவுளின் அருகில் கொண்டு செல்வதாகும். அதற்குத் தடையாய் இருக்கும் பல்வேறு பூட்டப்பட்ட கதவுகளைத் திறக்கும் சக்தியாக நம் வழிபாடுகள் எப்பொழுது மாறும் என்பதை திருப்பாடல் 51-ல் காணலாம்.

ஏனெனில் பலியினால் உம்மை மகிழ்விக்க முடியாது. நான் எரி பலி செலுத்தினாலும் நீர் அதில் நாட்டங்கொள்வதில்லை. கடவுளுக்கேற்ற பலி நொறுங்கிய நெஞ்சமே (திபா:51:16-17).

நம் திருப்பலி மற்றும் வழிபாடுகள் நம் ஆன்மாவுக்கும் கடவுளுக்கும் இடையே இருக்கும் பூட்டப்பட்ட கதவுகளைத் திறக்க வைக்கும் சக்தி வாய்ந்தவை. முதலில் வழிபாட்டிற்குள் நாம் நுழையும்போதே **“நான்”** என்ற அகந்தை பூட்டப்பட்ட கதவாக நிற்கின்றது. கடவுளின் முன் நாம் நிற்கும்போது நம் **“பாவங்கள்”** என்ற பூட்டப்பட்ட கதவு கடவுளைப் பார்க்க முடியாதவாறு மறைக்கின்றன. நம்முடைய காணிக்கைகள் மற்றும் நன்கொடைகள் கடவுளால் வெறுக்கப்படுகின்ற **“செல்வங்கள்”** என்ற பூட்டப்பட்ட கதவாக இருக்கின்றது. வழிபாட்டில் பங்கெடுப்பதில் நம்முடைய அலட்சியப்போக்கு, பக்தியை வெளிப்படுத்தாத செபங்கள் மற்றும் பாடல்கள் நம் **“அவநம்பிக்கை”** என்னும் பூட்டப்பட்ட கதவாக நிற்கின்றது. சமூகத்தில் சக மனிதர்களுக்கு நாம் செய்யும் **அநீதிகள்** மிக வலிமையான பூட்டப்பட்ட கதவு என்பதை மறக்க வேண்டாம்.

எத்தனை முறை நாம் திருப்பலி மற்றும் வழிபாடுகளில் பங்கெடுத்தாலும் நம் உள்ளத்தில் ஒரு சில கதவுகள் பூட்டப்பட்ட கதவுகளாகவே இருக்கின்றன. காரணம் நம் உளப்பாங்கில் மாற்றம் இல்லை. நம் வழிபாடுகளும் பயனற்றதாய்ப் போய்விடுகின்றன. ஊரடங்கு காலத்தில் வழிபாடுகளில் அதிகம் பங்கெடுக்க முடியவில்லை என்ற வருத்தம் வேண்டாம். நம் வழிபாடுகளை அர்த்தமுள்ளதாய் எப்படி மாற்றுவது என்ற சிந்தனை இருப்பது சாலச் சிறந்தது. நம் வழிபாடுகளை பூட்டப்பட்ட நம் இதயத்தின் பல கதவுகளை திறக்கும் திறவுகோல்களாய் பயன்படுத்த முயல்வோம். கொரோனா ஊரடங்கும் பயனுள்ளதே!!!


## 2021 ஆம் ஆண்டிற்கான பஞ்சாங்கம்

**அச்சில் உள்ளது, நூற்றுக்கும் மேல் தேவைப்படுவோர் முன்பதிவு செய்யவும்.**

## 2020-2021 ஆம் ஆண்டிற்கான சந்தா

புதுப்பித்துக் கொள்ளவும். மணியாடர் செய்பவர்கள் தங்கள் **சந்தா எண்ணை** மறக்காமல் குறிப்பிடவும்.

**Mission Press, 196, Cathedral Street, Puducherry - 605 001.**



# வசந்தமாய் வாழ்வு

அருட்பணி. **M. ஜான் கென்னடி,** துணை முதல்வர்,
தூய வளனார் மேல்நிலைப்பள்ளி திருப்பாப்புலியூர், கடலூர்.

## 16. துன்பத்திற்கு துன்பம் கொடு

வாழ்க்கையின் மிகப் பெரிய விபத்துகளுள் ஒன்று என்னவென்றால், நமக்கு வரும் துன்பத்தின் தன்மை உணராது, அதைக்கண்டு பீதியடைந்து, எழுந்து நிற்க வேண்டிய நேரத்தில் மூழ்கிப்போவதுதான். என்ன இந்த வாழ்க்கை? என்று எண்ணிவிடாமல், இறுதிவரை போராட வேண்டும். ஏனென்றால் கடைசி நேரத்தில் மாறிய ஆட்டம் ஏராளம் உண்டு.

விவேகானந்தர் ஒருமுறை காசியில் ஒரு குறுகலான சந்து வழியாக சென்றுகொண்டிருந்தார். திடீரென பத்து பதினைந்து பெரிய பெரிய குரங்குகள் அவரைத் துரத்தத் தொடங்கின. செய்வதறியாமல் விவேகானந்தர் ஓடலானார். அவைகளோ அவரை விடாமல் துரத்தின. இதைக் கண்ட வயதான துறவி ஒருவர் நிலைமையைப் புரிந்துகொண்டு, ஆணித்தரமான குரலில், "மகனே! ஓடாதே! திரும்பி நில். குரங்குகளை நோக்கி முன்னேறு. என்ன நடக்கிறதென்று பார்!" என்று அறிவுறுத்தினார். விவேகானந்தரும் அவர் சொன்னபடியே தம் ஓட்டத்தை நிறுத்திவிட்டு குரங்குகளை நோக்கித் திரும்பினார். குரங்குகள் திகைத்தவாறு அப்படியே நின்றன. அவர் தம் கால்களை உறுதியாக வைத்து மெல்ல குரங்குகளை நோக்கி நடக்கலானார். குரங்குகள் பம்மிப் பதுங்கின. அவரோ துணிச்சலோடு குரங்குகளை நோக்கி முன்னேறினார். அச்சமடைந்த குரங்குகள் தாங்கள் வந்த வழியே திரும்பி ஓடி மறைந்தன. பின்னாளில் இச்சம்பவத்தை நினைவு கூர்ந்த விவேகானந்தர், 'வாழ்வில் வரும் துன்பங்களெல்லாம் நம்மைத் துரத்தும் குரங்குகளே. அவற்றிற்கு அஞ்சி ஓடினால் அவை நம்மைத் துரத்தும். அவற்றை தைரியமாக எதிர்கொண்டால் அவை நம்மிடம் பயந்து நம்மை விட்டு ஓடியே போய்விடும்' என்று எழுதுகிறார்.

*இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு*
*இடும்பை படாஅ தவர்*

துன்பம் வந்தபோது அதற்காக வருந்திக் கலங்காதவர் அந்தத் துன்பத்திற்கே துன்பம் உண்டாக்கி அதை வென்று விடுவார் என்கிறார் வள்ளுவர். "துயரங்கள் வரும்போது தனித்தனியாக, வரிசையாக வருவதில்லை, பெரும்படையாகத்தான் வருகின்றன" என்கிறார் ஷேக்ஸ்பியர். ஒருவருக்கு அடுக்கடுக்காக எவ்வளவு துன்பம் வரலாம் என்பதை பின்வரும் விவேக சிந்தாமணிப் பாடல் சொல்கிறது.

*"ஆவீன, மழைபொழிய, இல்லம் வீழ,*
*அகத்தடியாள் மெய்நோவ, அடிமை சாக,*
*மாவீரம் போகுதென்று விதை கொண்டோட*
*வழியிலே கடன்காரன் மறித்துக்கொள்ள*
*சாவோலை கொண்டொருவன் எதிரே தோன்ற*
*தள்ளவொண்ணா விருந்துவர, சர்ப்பம் தீண்ட,*
*கோவேந்தர் உழுதுண்ட கடமை கேட்க*
*குருக்கள் வந்து தட்சணைகள் கொடு என்றாரே!"*

பசு கன்று போட்டிருக்கும் தருணம். வீடு மழையில் இடிந்து விழுந்துவிட்டது. மனைவி பிரசவ வேதனையால் துடிக்கின்றாள். வேலைக்காரன் இறந்துவிட உதவிக்கு ஆள் இல்லை. ஈரம் உலர்வதற்குள் நிலத்தில் விதைக்கவென்று விதைக் கொண்டு செல்கையில், கடன் கொடுத்தவன் வழிமறித்து கடனை அடைக்கச்சொல்லி அதட்டுகிறான். அந்நேரம் உறவினர் இறந்துவிட்ட செய்தித்தாங்கிய ஓலையோடு வருகிறான் ஒருவன். அதேநேரம் தவிர்க்கவே முடியாத விருந்தாளியும் வந்துசேர்கிறார். இந்தச் சூழ்நிலையில் இவனை பாம்பு ஒன்று கடித்துவிடுகிறது. அப்போது நிலவரி கேட்டு அரசன் ஆள் அனுப்புகிறான். இவை எதையும் பொருட்படுத்தாமல் கோயிலுக்கு நன்கொடை கேட்டு குருக்கள் வருகின்றனர். என்னதான் செய்வான் அவன்? வாழ்வில் துன்பங்கள் இப்படி தொடர்ந்து வரும். கலங்காதே, ஆறுதல் கொள் என்பதுதான் இப்பாடல் சொல்லும் செய்தி. இதையே வள்ளுவர்,

*அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற*
*இடுக்கண் இடுக்கட் படும்*

மேலும் மேலும் துன்பங்கள் வந்து வருத்தினாலும், கலங்காத ஆற்றலுடையவன் முன்னால் அத்துன்பமே துன்பப்பட்டு அழிந்து போகும் என்கிறார்.

1889ல் லண்டனில் பிறந்த சார்லி சாப்ளின் உலகையே சிரிக்கவைத்தவர். ஆனால் பிறந்ததில் இருந்தே அவருக்கு துன்பங்கள், தோல்விகள், அவமானங்கள்தான் அதிகம். அவரின் சிறு வயதிலேயே அவரது பெற்றோர் பிரிந்துவிடுகின்றனர். தாயோடு சேர்ந்து மேடைகளில் பாடல் பாடினார். ஆனால் அவரின் ஏழு வயதிலேயே அவரது தாய் மனநிலை பாதிக்கப்பட்டவராகிறார். சலூன் கடை, கண்ணாடித் தொழிற்சாலை, மருத்துவமனை எனப் பல இடங்களில் வேலை பார்த்தார். தந்தையோடு சில காலம் மேடை நாடகங்களில் நடித்தார். திடீரென தந்தையும் இறந்துவிடுகிறார். பிறகு அமெரிக்கா சென்று குறும்படங்களில் நடித்து புகழ்பெற்றார். 'தி கிட்' படத்தின் வழியாக அவரது வளர்ச்சித் தொடங்கியது. மறுபுறம் குடும்ப வாழ்வின் சோகங்கள் அவரை பாடாய்ப் படுத்தியது. அவரது மூன்று திருமணங்கள் தோல்வியில் முடிந்தன. நான்காவதாக ஓ.நெய்ல் என்பவரை மணமுடித்தார்.

ஒரு கட்டத்தில் அமெரிக்க அரசு இவரை ஒரு கம்யூனிஸ்ட் தீவிரவாதி என குற்றம் சாட்டியது. எனவே சுவிட்சர்லாந்தில் குடியேறினார். காலச் சக்கரம் சுழல, அதே அமெரிக்க அரசு, 'உலகின் தலைசிறந்த நகைச்சுவை நடிகர்' விருது பெற சாப்ளினை அழைத்தது. விருதினை ஏற்றுக்கொண்டாலும், அமெரிக்காவில் வசிக்க விருப்பமின்றி மீண்டும் சுவிட்சர்லாந்து கிளம்பினார். விமான நிலையத்தில் பத்திரிக்கையாளர்கள் அவரிடம், "வாழ்நாள் முழுவதும் போர்க்களமாக இருந்தாலும் எப்படி ஜெயித்தீர்கள்?" எனக் கேட்டார்கள். அதற்கு அவர், "**இந்த நிலை மாறிவிடும்** என்பதை நான் எப்போதும் மறந்ததில்லை. அது இன்பமாக இருந்தாலும் சரி, துன்பமாக இருந்தாலும் சரி... மாறிவிடும்" என்று பதிலளித்தார். இன்பத்திலும் துன்பத்திலும் நாம் நினைவில் கொள்ள வேண்டியது, 'இந்த நிமிடம் நிரந்தரமல்ல – எல்லாம் சில காலம் - இதுவும் கடந்து போகும்'

வசந்தம் வீசும்...

# இறையாட்சிப் பணியில் பெண்கள்



- அருட்சகோதரி **டெரன்ஸ்மேரி,** FIHM கடலூர்

## கருத்துரை – 47

### அன்னா (தொடர்ச்சி) (சாமு 1:1-2:21)

### படைத்தவருக்குப் பாராட்டுப் பா!

தனது சபதத்தின்படி, தன் அழகு மகனை (சாமுவேலை) இறைவனுக்காக ஏலியின் கையில் ஒப்படைத்தப்பின் அன்னா மன்றாடிப் பாடிய இனிய பாடலை (1சாமு. 2:1-11) ல் காண்கிறோம். அன்னை மரியாவின் பாடலோடு இவர்களது பாடல் ஒத்திருப்பதாகவும், இது ஒரு முன்னோடியானது என்றும் கருதுகின்றனர் விவிலிய வல்லுநர்கள்.

உணவின்றி உதிரம் ஊறாது.
உதிரமின்றி உறுப்புகள் இயங்காது.
உறுப்புகள் இன்றி உடல் வளராது.
உடல் வளராவிட்டால் அது
உதவாப் பொருளாகிவிடும் அன்றோ!
**அவ்வாறே மனதிற்கும் ஆன்ம உணவு தேவை.**
அன்புணவின்றி செப ஆற்றல் ஊறாது
செபமின்றி அருள் கிட்டாது.
அருள் உணவின்றி ஆன்மா புனிதமடையாது
ஆன்மா புனிதம் பெறாவிடில் நம்
உயிர் மீட்புப் பெறாது அன்றோ!

**குறிப்பிட்ட நேரங்களில்** உணவறை, உணவகம் (ஹோட்டல்), வீடு, போன்ற **குறிப்பிட்ட இடங்களில்தான்** நாம் உணவருந்துகிறோம். காரணம் நாம் அவ்வாறு பழக்கப்படுத்தப்பட்டிருக்கிறோம். அவ்வாறு குறிப்பிட்ட நேரங்களில், குறிப்பிட்ட இடங்களில், உண்ணும் உணவே அதன்பிறகு உறுப்புகளின் வழி அசைபோடப்பட்டு உதிரமாக மாற்றப்படுகிறது.

அவ்வாறே **குறிப்பிட்ட நேரங்களில்** ஆலயம், பூசைஅறை, தியானமையங்கள், தனி அறைகள் போன்ற **குறிப்பிடப்பட்ட இடங்களில்** செபிக்கிறோம். அவ்வாறு செபித்துப்பெற்ற அருளை அந்நாள் முழுதும் எண்ணங்கள் அசைபோடுகிறது. அப்படி அசைபோட்டுக் கொண்டேயிருக்கும்போது, **தெய்வீகசக்தி** மனதினின்று வழிந்து உடல் முழுதும் பேராற்றலாய் பாய்ந்தோடி நம்மை மட்டுமல்ல நாம் இருக்கும் இடங்கள் முழுவதையும் நிரப்பும் என்பதில் சந்தேகமில்லை.

அப்படி ஒரு பேராற்றல் அன்னாவின் அகத்திலும், அவயவத்திலும் வழிந்தோடிய நேரத்தில் அன்னாவின் உயிரும், உடலும், உள்ளமும் ஒருசேர உதடுகள்வழி உதிர்த்ததுதான் இம்மன்றாட்டுப் பாடல். (1சாமு. 2:1-11)

1. "அப்பொழுது அன்னா மன்றாடிக் கூறியது. ஆண்டவரை முன்னிட்டு என் இதயம் மகிழ்கின்றது! ஆண்டவரில் என் ஆற்றல் உயர்கின்றது! என்வாய் என் எதிரிகளைப் பழிக்கின்றது! ஏனெனில் நான் நீர் அளிக்கும் மீட்பில் களிப்படைகிறேன்.
2. ஆண்டவரைப்போன்ற தூயவர் வேறு எவரும் இலர்! உம்மையன்றி வேறு எவரும் இலர்! நம் கடவுளைப் போன்ற வேறு பாறை இல்லை.
3. இறுமாப்புடன் இனிப் பேச வேண்டாம்! உங்கள் வாயில் வீம்பு வெளிப்பட வேண்டாம்! ஏனெனில், ஆண்டவர் அறிவின் இறைவன்! செயல்களின் அளவை எடைபோடுபவர் அவரே!
4. வலியோரின் வில்கள் உடைபடுகின்றன! தடுமாறினோர் வலிமைப் பெறுகின்றனர்!
5. நிறைவுடன் வாழ்ந்தோர் கூலிக்கு உணவு பெறுகின்றனர். பசியுடன் இருந்தோர் பசி தீர்ந்தார் ஆகியுள்ளனர்! மலடி எழுவரைப் பெற்றெடுத்துள்ளாள், பலபுதல்வரைப் பெற்றவளோ தனியாள் ஆகின்றாள்!
6. ஆண்டவர் கொல்கிறார். உயிரும் தருகின்றார். பாதாளத்தில் தள்ளுகிறார். உயர்த்துகின்றார்.
7. ஆண்டவர் ஏழையாக்குகிறார். செல்வராக்குகின்றார். தாழ்த்துகின்றார். மேன்மைப்படுத்துகின்றார்!
8. புழுதியினின்று அவர் ஏழைகளை உயர்த்துகின்றார்! குப்பையினின்று வறியவரைத் தூக்கிவிடுகின்றார்! உயர்குடியினரோடு அவர்களை அமர்த்துகின்றார்! மாண்புறு அரியணையை அவர்களுக்கு உரிமையாக்குகின்றார்! உலகின் அடித்தளங்கள் ஆண்டவருக்கு உரியவை! அவற்றின்மேல் அவர் உலகை நிறுவினார்!
9. தம்மில் பற்றுக்கொண்டோர் காலடிகளை அவர் காப்பார்! தீயோர் இருளுக்கு இரையாவர்! ஏனெனில், ஆற்றலால் எவரும் வலியவர் ஆவதில்லை!
10. ஆண்டவரை எதிர்ப்போர் நொறுக்கப்படுவர்! அவர் அவர்களுக்கு எதிராக வானில் இடிமுழங்கச் செய்வார்! ஆண்டவர் உலகின் எல்லைவரை தீர்ப்பிடுவார்! தம் அரசருக்கு வலிமை தருவார்! தாம் திருப்பொழிவு செய்தவரின் ஆற்றலை உயர்த்துவார்.

### இவ்வாறு...

கடவுளின் சித்தத்தை இதய நன்றியுடன்
ஏற்றுக்கொண்ட அன்னா!
ஆண்டுதோறும் இறைவனை வணங்கிய அன்னா!
ஆன்மீக தியாகங்களைச் செய்த அன்னா!
தனது செபத்தில் சக்தியிருப்பதாக உணர்ந்த அன்னா!
கடவுள் தனக்காக வேலை செய்கிறார் என்பதை
மனதால் அறிந்த அன்னா!
அவர் ஒரு பாறை, அவர்மீது முழுமையாக சாய்ந்து கொள்ளலாம் என்று நம்பிய அன்னா!
கொந்தளிப்பு நேரத்தில் சீராக வைத்துக்கொள்வார்
என்றுணர்ந்த அன்னா!
விடாமுயற்சியுடைய அன்னா!
முழு இதயத்தோடும் முழு ஆன்மாவோடும் கடவுளின்
வாக்குறுதியை விசுவசித்த அன்னா!
பெறப்பட்ட ஆசிர்வாதங்களுக்காக மிகிழ்ச்சியடைந்த அன்னா!
கடவுளைப் பாராட்டிய அன்னா! நீர் பேறுபெற்றவரே!

### அன்னாவின் அழகு இதயம் பாடிய மன்றாட்டு...

கறுமை நீக்கி சிறுமை போக்கும் சிறப்பான மன்றாட்டு
வறுமை தீர்த்து வெறுமை அகற்றும் அற்புத மன்றாட்டு
பெருமை சேர்த்து பொறுமையாக்கும் புனித மன்றாட்டு
ஒருமையாக்கி மறுமை தரும் மகத்துவ மன்றாட்டு
மொத்தத்தில் இது அன்னாவின் அருமையான மன்றாட்டு
**இப்படி மன்றாடுவோரின் மனங்கள் நிச்சயம்**
**அதிசயங்களைக் காணும்.**

அதன்பின் எல்கானா இராமாவிலுள்ள தம் வீட்டிற்குச் சென்றார். சிறுவனோ (சாமுவேல்) குரு ஏலியின் முன்பாக ஆண்டவருக்கு ஊழியம் செய்துவந்தான் (2:11).

# பூமி பார்த்த வானம்..



**அருள்திரு. L. ஆரோக்கியதாஸ்,**
உதவி பங்குத்தந்தை, பேராலயம், புதுவை.

**'வானம் பார்த்த பூமி'** என்ற தமிழர் பண்பாட்டு வாக்கியத்தை நம்மில் பலரும் கேள்விப்பட்டிருப்போம். எப்படி இந்த வாக்கியம் வழக்கில் வந்தது என்று சிந்திக்கிறபோது, ஏரியின் மதகு பாசன வசதியோ அல்லது கிணற்று நீர் பாசன வசதியோ இல்லாத, நீர் வளமற்ற, வானத்திலிருந்து மழை பெய்தால் மட்டுமே பயிர் செய்ய முடியும் எனும் நிலையில் இருக்கும் நிலப் பகுதியைத்தான் வானம் பார்த்த பூமி என்று சொல்வார்கள். இத்தகைய நிலத்தில் நெல், கரும்பு போன்ற தண்ணீர் அதிகம் தேவைப்படுகின்ற அல்லது அறுவடைக்கு நீண்ட நாட்கள் ஆகின்ற பயிர்களை பயிரிட இயலாது. மாறாக தண்ணீர் அதிகம் தேவைப்படாத, வறட்சியை தாங்குகின்ற, குறுகியகாலப் பயிர்களைத்தான் பயிர் செய்யமுடியும். ஏனென்றால் அத்தகையப் பயிர்கள், விதைப்புச் செய்த பின் ஒன்று அல்லது இரண்டு மழை பெய்தாலே ஓரளவு விளைந்து விடும். நீருக்காக ஏரியையோ, கிணற்றையோ அல்லது ஆழ்துளை கிணற்றையோ சார்ந்திராமல் வானத்தை மட்டுமே நம்பி, மழைக்காக வானத்தைப் பார்த்துக் கொண்டேயிருப்பதால் 'வானம் பார்த்த பூமி' என்று பெயர்க்காரணம் வழங்கலாயிற்று.

ஆனால் உண்மையில், 'வானம் பார்த்தபூமி' என்று சொல்வதற்குப் பதில் **'பூமி பார்த்த வானம்'** என்று சொல்வதே மிகமிகப் பொருத்தமான தாகும். மழை வானத்திலிருந்து பெய்தாலும் அதற்கு வானம் காரணமல்ல. மாறாக, வானத்திலிருந்து பெய்யும் மழைக்கு பூமியே காரணம். அறிந்தும் அறியாத வயதில், அறிவியல் பாடத்தில் மழை எவ்வாறு உருவாகிறது என்று படித்தது நமக்கு நினைவிருக்கலாம். கடலில் இருக்கும் நீரானது சூரியவெப்பத்தின் காரணமாக நீராவியாகி மேலே சென்று மேகமாக மாறுகிறது. குளிர்ந்த காற்றுவீசும்போது அது மழையாகப் பொழிகிறது. இந்த நீராவிச் சுழற்சியில் மரங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மரங்கள் நிலத்தடிநீரை வேரினால் உறிஞ்சி, தங்கள் தேவைக்குப்போக மீதமுள்ள நீரை இலைத்துளைகள் வழியாக நீராவியாக வெளியேற்றுகின்றன. அதைப்போலவே மரங்கள் கரியமில வாயுவை (கார்பன் -டை- ஆக்ஸைடு) உள்வாங்கிக் கொண்டு, உயிர்க் காற்றை (ஆக்ஸிஜன்) வெளிவிடுகின்றன. அறிவியல் கூற்றின் படி, வெப்பம் அதிகமிருக்கிற இடத்தில் காற்று (மேகம்) ஈர்க்கப்படுவதில்லை. மாறாக குளிர்ச்சி அதிகமுள்ள இடத்தில் காற்று ஈர்க்கப்படுகிறது. மரங்கள் ஆக்ஸிஜனை வெளியிட்டு, அதிக குளிர்ச்சியை ஏற்படுத்தி மேகங்களை தங்கள் பக்கம் ஈர்க்கின்றன. மரங்கள் அதிகமுள்ள இடங்கள் மற்றும் காடுகளில் அதிக மழை பெய்வதற்கு இதுவே காரணம். புவிவெப்பமடைதல், வறட்சி, ஓசோன் படலம் பாதிப்பு, புற்று நோய்கள் மற்றும் எண்ணற்ற நோய்ப்பெருக்கம் போன்ற அனைத்து சிக்கல்களுக்கும் மரம் ஒன்றே மருந்தாகும்.

மழைக்காக நாம் வானத்தையே அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தால் மழைவராது. மாறாக, நாம் பூமியை குனிந்து பார்க்கவேண்டும். அதைக்குளிர வைக்கவேண்டும். மரங்களை நட வேண்டும், மண்ணை வளமாக்கவேண்டும். பூமி எப்போது பசுமையாக மாறும்? எப்போது நீராவிகள் தன்னை நோக்கி எழும்பும்? எப்போது குளிர்ந்த காற்று வீசும் என்று வானம் ஒவ்வொரு நாளும் பூமியைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. இனி 'வானம் பார்த்த பூமி' என்று சொல்லாமல் 'பூமி பார்த்த வானம்' என்று சொல்லுவோம். அதுவே பொருத்தம், அதுவே உண்மை.

**செயல்**: இத்தனை ஆண்டுகள் நான் உயிர் வாழ காற்று, நீர், பழங்கள், மூலிகைகள், உணவுகள் மற்றும் கனிமங்கள் இவற்றைக்கொடுத்த இயற்கைக்கு நான் இதுவரை செய்தது என்ன? ஒரு செடியையாவது அல்லது ஒரு மரத்தையாவது நட்டிருக்கின்றேனா? அதற்கு தண்ணீர் ஊற்றியிருக்கின்றேனா? உரமிட்டுப் பராமரித்திருக்கின்றேனா? அது வளர்வதைக் கண்டு மகிழ்ந்திருக்கின்றேனா? அய்யோ! இதுவரை நான் ஏதும் செய்ததில்லை, இனி கண்டிப்பாக ஏதாவது செய்வேன். நான் போனபின்னும் இருப்பதற்கு ஒரு மரத்தையாவது, செடியையாவது நட்டுச் செல்வேன், எனக்குப் பின் அவற்றை விட்டுச் செல்வேன். **அப்போது...**

**பூமி பார்க்கும் வானம் புன்முறுவல் பூக்கும்!**

பூமாரி பொழியும்!..

---

**விண்ணக வாழ்வின்**
**6-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி**

**தோற்றம்: 25-09-1927**



**மறைவு: 05-11-2014**

**Rev.Fr.S.கிறிஸ்தோபர்**

*"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவான்.11:25*

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 5-11-2020 செவ்வாய் காலை 6.00 மணிக்கு திண்டிவனம், புனித வியாகுல அன்னை ஆலயத்திலும், காலை 6.15 மணிக்கு புதுவை, புனித ஜென்ம ராக்கினி அன்னை பேராலயத்திலும் திருப்பலி நிறைவேற்றப் படும். இதை கண்ணுறும் அனைவரும் இக்குரு வின் ஆன்ம சாந்திக்காக ஜெபிக்க வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்

**M.Durairaj & Family.**

---

எப்படிப் பாடினாரோ
எப்படிப் பாடினாரோ... அடியார்

எப்படிப் பாடினாரோ
அப்படிப் பாட நான் ஆசைப்பட்டேன்
இயேசுவே!

அப்பனும் அம்மையும்
ஆளுமைப் பெரியோரும்
அருள்நிறை உடையாரும்
பொருளுணர்ந்து உனையே
எப்படிப் பாடினாரோ
அப்படிப் பாட நான் ஆசைப்பட்டேன்
இயேசுவே!

திருநிறை மறையாரும்
திருவருள் புனிதரும்
மறைவேத ஞானியரும்
வானவத் தூதரும்
எப்படிப் பாடினாரோ
அப்படிப் பாட
நான் ஆசைகொண்டேன் இயேசுவே!

கருணைக்கடல் பெருகி
காதலாலே உருகி
கனித்தமிழ் சொல்லெழுத்து
தனித்துனை அனுதினமும்
எப்படிப் பாடினாரோ
அப்படிப் பாட
நான் ஆசைகொண்டேன் இயேசுவே!

**ஆக்கம்: மார்கிரேட் நிக்கோலாசு**

# பச்சிலை ரகசியம்



ஜெயராஜ் தானியேல், முத்தியால்பேட்டை, புதுவை.

கடந்த மூன்று நாட்களாகப் பட்டினி கிடக்கிறான் அந்தப் பிச்சைக்காரன். தெருவில் தள்ளாடியபடியே ''அம்மா, சோறு போடுங்கம்மா! தர்ம தாயி!'' என்று குரலெழுப்பிக் கொண்டே சென்றவனுக்கு எவரும் உணவளிக்கவில்லை. நிதானமாய் யோசித்தான். திடீரென அவன் மூளையில் ஏதோ பளிச்சிட்டது. பசி வந்தவனுக்கு பத்தும் பறந்து போகும் அல்லவா? **''கஞ்சர்தரும் உணவை உண்ணாதே'' என்று நீதி மொழிகள் (23:6)** சொல்வதை மறந்து போனாலும் **''அவர் (கஞ்சர்) தமக்குள் கணக்குப் பார்த்துக் கொண்டிருப்பார்''** நீதிமொழிகள் (23:7) என்ற வசனத்தை மனதிலிருத்தி திட்டமொன்றைத் தீட்டி ஒரு வீட்டின் கதவருகில் சென்று ''மரணத்தை விரட்டும் அதிசயமான பச்சிலை யாருக்கு வேண்டும்?'' என்று மெல்லிய குரலில் அழைத்தான். இதைக் கேட்ட அந்த வீட்டு பணக்காரக் கருமி இவனை அழைத்து, ''ஏம்பா, இங்கே வா. எங்க இருக்குது அந்த மூலிகை? எனக்கு மட்டும் சொல்லேன்,'' என்று வேண்டினான்.

''அய்யா, முதலில் எனக்கு சாப்பிட ஏதாவது தாங்க. அந்தப் பச்சிலை பற்றி உங்களுக்குச் சொல்கிறேன். ஆனால், நீங்க அதை வேறு யாருக்கும் சொல்லக்கூடாது. அப்படி யாருக்காவது அந்த ரகசியத்தைத் தெரிவித்தால் உங்களைக் கொடிய நோய் வந்து பீடிக்கும். பிறகு, உங்களை ஆண்டவனாலும் காப்பாற்ற முடியாது,'' என்று மூச்சிரைக்கப் பேசி முடித்தான் பிச்சைக்காரன்.

தான் அந்த ரகசியத்தை வேறு யாருக்கும் சொல்வதில்லையென்று சத்தியம் செய்துவிட்டு பிச்சைக்காரனுக்கு விருந்தளித்து உபசரித்தான் பணக்காரன். சாப்பிட்டு எழுந்தவனை நோக்கி, ''வாப்பா. வந்து மூலிகையைக் காட்டு,'' என்று துரிதப்படுத்தினான் கருமி.

''அய்யா, சற்றுப் பொறுங்கள். மாலை மயங்கும் நேரத்தில் தான் அந்தப் பச்சிலையைக் காட்டவேண்டும். அதற்குள் கொஞ்சம் கண்ணயர்கிறேன்,'' என்று சொல்லி கருமியின் வீட்டுத் திண்ணையிலேயே படுத்துறங்கினான். பணக்காரனுக்கோ இருப்புக் கொள்ளவில்லை. இங்கும் அங்கும் குட்டிபோட்ட பூனையைப் போல வீட்டிற்குள் உலாவினான். பிச்சைக்காரன் புரண்டு படுப்பதைப் பார்த்ததும், ''அய்யா, அய்யா, சாமியாரே! தூங்கியது போதும். எழுந்திருங்கள். மாலை மயங்கிவிட்டது,'' என்று கூவி எழுப்பினான்.

''வாருங்கள், அதைக் காட்டுகிறேன்,'' என்று புறப்பட்டான் பிச்சைக்காரன். ஊர் எல்லையைத் தாண்டியதும், ''அதோ அங்கே பச்சிலை தெரிகிறதா?'' என்றான்.

''இல்லையே. ஒண்ணும் தெரியலையே சாமி!''

''இதோ தெரிகின்றனவே பச்சைப் பசேலென்ற வயல்கள்.''

''ஆமாம், சாமி.''

''இந்தப் பயிர்கள் தான் அந்தப் பச்சிலை,'' சீண்டினான் பிச்சைக்காரன்.

''என்ன, இந்த நெற்பயிர்களையா சொல்கிறாய்?'', சீறினான் கருமி.

''ஆமய்யா. உங்கள் வீட்டில் அரிசி இல்லையென்றால் இந்நேரம் நான் செத்திருப்பேன் அல்லவா!'' என்று சொல்லிவிட்டு ஓடி மறைந்தான் பிச்சைக்காரன்.

---

**விண்ணக பிறப்பின் 33-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி** | **விண்ணக பிறப்பின் 6-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி**

மண்ணில் மலர்ந்தது: 08-11-1919
இறைவனில் இணைந்தது: 23-11-1987



மண்ணில் மலர்ந்தது: 18-10-1929
இறைவனில் இணைந்தது:01-11-2014

**திரு. D.பிலோமிநாதன்** (Revenue Insp.(Retd) Karaikal)

**திருமதி.மரிலூயிஸ்(எ) இருதயமரி** Karaikal

**நித்திய ஒளியின் தூய்மையாகிய சேசுவே, ஆத்துமங்களை நேசிக்கிறவரே, பூலோகத்தைவிட்டு உம்மால் தெரிந்தெடுக்கப்பட்ட உமது அடியார்களாகிய எங்கள் பெற்றோரின் ஆத்துமங்களுக்கு நித்திய இளைப்பாற்றியையும் முடிவில்லா பிரகாசத்தையும் கட்டளையிட்டருளும் சுவாமி. ஆமென். - கர்.மங்.திரி.**

22-10-2020 ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு காரைக்கால், புனித தேற்றரவு அன்னை ஆலயத்திலும், காலை 6.30 மணிக்கு புதுவை திரு இருதய ஆண்டவர் பசி-க்காவிலும் திருப்ப- நிறைவேற்றப்படும்.

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 01-11-2020 ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு புதுவை திரு இருதய ஆண்டவர் பசி-க்காவிலும், காலை 6.30 மணிக்கு புனித ஜென்ம ராக்கினி அன்னை பேராலயத்திலும், திரு.ஜெயப்பிரகாசம் சவரி, திருமதி. சூசைமரி அம்மாள், திரு.D. பிலோமிநாதன் அவர்கள் ஆன்ம இளைப்பாற்றிகாக திருப்ப- நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்
மகன்: **ராஜா (எ) தனராஜா அமலோர்**
மருமகள், பேரன், பேத்தி - புதுவை - 1.

---

**விண்ணக வாழ்வின் 30-ஆம் நாள் நினைவு அஞ்ச-**

மண்ணில்: 24.02.1948



விண்ணில்: 25.09.2020

**திரு. மை. அந்தோணி மார்டீன்**

உன் செயல்களை நான் அறிவேன் இதோ எவராலும் பூட்டமுடியாத கதவை நான் உனக்காக திறந்து வைத்திருக்கிறேன்.

- திவெ.3-8.

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 24-10-2020 சனிக்கிழமை காலை 6.00 அரியாங்குப்பம், புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் திருப்ப- நிறைவேற்றப்பட்டது. கண்ணுறும் அனைவரும் அன்னாரின் ஆன்ம சாந்திக்காக செபிக்க வேண்டுகிறோம்.

பிரிவால் வருந்தும்
மனைவி: அல்போன்ஸா
மகன்கள், மருமகள்கள், பேரப்பிள்ளைகள்
மற்றும் உடன்பிறப்புகள்.

ஜெயராம் நகர், அரியாங்குப்பம்.

# நினைவு அஞ்சலி



**Mr. VICTOR Aroquiassamy**

Retraité Militaire (TDM)

தோற்றம்: 28-05-1924

மறைவு: 13-08-1970

**Mme. VICTOR Viagoulamarie Montcarmel**

தோற்றம்: 18-05-1924

மறைவு: 30-03-1999

***"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவான்.11:25***

### ஜெபம்

ஆண்டவரோடு இணைந்த நிலையில் இறப்போர் அவர்கள் தங்கள் உழைப்பிலிருந்து ஓய்வு பெறுவார்கள். ஏனெனில் அவர்களைப் பின்தொடரும்.

- திவெ.14:13.

**அன்பின் ஆலமரமாய், ஆண்டவரை அன்பு செய்து, அனைவரையும் வாழ்வித்த எங்கள் அன்பு பெற்றோரே! நீவீர் என்றும் வாழ்வீர் இறைவனின் இதயத்தில்.**

பிரிவால் துயருறும்

திரு. Victor Rousseau

திருமதி. Victor Delphine née Montcarmel

பேரப்பிள்ளைகள்: SOPHIE SANKAR MOUTTOU, SANDRINE ALPHONE SANTI, STEPHANE VICTOR, MAILYS

கொள்ளுப்பேரப்பிள்ளைகள்:

Sonia, Cynthia, Noemie, Joachim, Joanne, Manon et Mathéo

**நினைவுத் திருப்பலி:** 01-11-2020 காலை 7.00 மணிக்கு புதுவை, சம்மனசுக்கள் இராக்கினி அன்னை ஆலயத்தில் திருப்ப- நிறைவேற்றப்படும்.

# நினைவு அஞ்சலி



**Mr. MONTCARMEL Edouard Ratchaganadin**

Professeur au Petit Seminaire
Commis au Bureau des affaires Militaire
(Consulat General de Pondichery)
Commis au Bureau de PONT de Chaussée
(Lyon en France)

தோற்றம்: 23-02-1920

மறைவு: 10-03-2005

**Mme. Montcarmel Celine**

தோற்றம்: 07-03-1934

மறைவு: 23-12-2007

***"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவான்.11:25***

இரக்கம் நிறைந்த இயேசுவே! எங்கள் குடும்பத்தில் அனைத்து உறுப்பினர்களையும், உறவினர்களையும், புன்னகையால், அரவணைத்து எங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டியாய் இருந்து தான் பட்ட கஷ்டங்களை, உமது சிலுவையின் பாரத்தில் பங்குகொண்டதாக உணர்ந்து, உம்மிடம் வந்துள்ள இவர்களுக்கு, உமது நித்திய ஒளியை அளித்து, உமது புனிதரின் கூட்டத்தில் சேர்த்தருளும், ஆமென்.

பிரிவால் துயருறும்

மகள் திருமதி. Victor Delphine née Montcarmel

மருமகன் திரு. Victor Rousseau

பேரப்பிள்ளைகள்: SOPHIE SANKAR MOUTTOU, SANDRINE ALPHONE SANTI, STEPHANE VICTOR, MAILYS

கொள்ளுப்பேரப்பிள்ளைகள்: Sonia, Cynthia, Noemie, Joachim, Joanne, Manon et Mathéo

**நினைவுத் திருப்பலி:** 01-11-2020 காலை 7.00 மணிக்கு புதுவை, சம்மனசுக்கள் இராக்கினி அன்னை ஆலயத்தில் திருப்ப- நிறைவேற்றப்படும்.

## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



# Georges RAYER

பிறப்பு:24-04-1934 இறப்பு:05-11-2019

*"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவான்.11:25*

எங்களை உன் உயிரினும் மேலாய்
பாதுகாத்தாய் நீ!
பூவுலகில் அனைத்துக் கடமைகளையும்
சிறப்பாய் செய்தாய் நீ!
உன்னை நாடி வந்தவர் அனைவருக்கும்
உதவினாய் நீ!
அவர்கள் மகிழ்ச்சியில் இன்பத்தை கண்டாய் நீ!
இறைவன் திருவடி சேர்ந்தாய் நீ!
முதல் ஆண்டு நிறைவு பெற்றது இன்று
உன் பசுமை நினைவுகளில் துயரத்துடன் வாழும்!

பிரிவால் துயருறும்
**பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.**

**நினைவுத் திருப்பலி:** 31-10-2020 அன்று காலை 11.00 மணிக்கு **Paroisse de le Madeleine (75008 PARIS)** லும், 05-11-2020 புனித ஜென்ம இராக்கினி அன்னை பேராலயத்திலும் காலை 6.15 **(PONDICHERY)** நடைபெறும். இதை கண்ணுறும் அனைவரும் இவரது ஆன்ம சாந்திக்காக செபிக்க வேண்டுகிறோம்.

## விண்ணக வாழ்வின் 7-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 21.06.1924



மறைவு: 11.09.2013

**மதர். பிபியான் தெ கொன்சகா** FSAG

தோற்றம்: 04-10-1946



மறைவு: 06-11-2013

**Rev. Fr. D. பிரான்சிஸ்**
ஜான்சி மறைமாவட்டம் **U.P.**

"ஜீவியத்தில் உம்மை நேசித்தோம், மரணத்திலும் உம்மை மறவோம்.
இடைவிடாமல் உம் பெயரை புகழ்வோம் நன்றி பாடுவோம்.''

06-11-2020 அன்று வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு திரு இருதய ஆன்டவர் பசிலிக்காவில் தேவசகாயம்-லூர்துமரி, Fr.D.பிரான்சீஸ், மதர் பிபியானா, அல்போன்சா, நுகா சின்னதம்பி, நுகா சந்தரா, கிறிஸ்தியான் பல்லி, லூர்துசாமி பல்லி - மதலேன் பல்லி இவர்களுக்காக நினைவு திருப்பலி நிறைவேற்றப்படும். இவர்களின் ஆன்மா இறைவனின் நித்திய வாழ்வில் சேர்த்துக்கொள்ளும்படி ஜெபிக்க கேட்டுக் கொள்கிறோம்.

பிரிவால் துயருறும்

D.L. *நாதன் - வனஜா; நிர்மலா-சிவக்குமார்; விமல்-லீமா; பிரீத்தி, சிந்தியா, ஷெரன், நீனா, லயா மற்றும் உறவினர்கள்.*

புதுவை.

## விண்ணக வாழ்வின் 47-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 10-01-1905



மறைவு: 07-11-1973

**தமியன் லூர்துசாமி**
**தமியன் ஆரோக்கியமரி**

*"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவான்.11:25*

இவரது ஆன்மா இறைவனில் நித்திய இளைப்பாற்றியையும் முடிவில்லா பேரின்ப பிரகாசத்தையும் பெற்றிட இதை கண்ணுறும் அனைவரும் செபிக்க வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்
**மகள், மருமகள், மருமகன்கள், மற்றும் பேரப்பிள்ளைகள்.**
முருங்கப்பாக்கம்.

# கண்ணீரோடு நினைவு கூறுகின்றோம்



அருட்தந்தை M. **ஜெயசீலன்** அவர்கள் 26-10-2020 அன்று விடியற்காலை 5.35 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அருட்தந்தை அவர்கள் 20-06-1976 அன்று திருவாளர் D. மைக்கேல் - திருமதி A. தெரசம்மாள் இவர்களுக்கு மகனாக இருதயம்பட்டில் பிறந்தார். 1981-1989 ஒன்று முதல் எட்டாம் வகுப்பு முடிய இருதயம்பட்டிலும், 1989-1992 ஒன்பதாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு முடிய திண்டிவனம், புனித அன்னாள் மேல்நிலைப் பள்ளியிலும், 1995-1998 கடலூர், புனித வளனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலும் பயின்றார்.

## குருமட வாழ்வு

1992-1995ல் கடலூர் புனித ஆக்னஸ் இளங் குருமடத்தில் 11, 12ம் வகுப்புகள் மற்றும் இலத்தீன் புகுமுகப் படிப்பினை மேற்கொண்டார். பின்னர் கல்லூரிப் படிப்பை 1995 முதல் 1998 முடிய கடலூர் தூய யோவான் குருமடத்திலும், 1998 முதல் 2000 முடிய கோயம்பத்தூர் நல்லாயன் குருத்துவக் கல்லூரியில், தத்துவயியல் பயின்றார். 2000 முதல் 2001 முடிய விக்கரவாண்டியில் தன்னுடைய களப்பணி பயிற்சியை மேற்கொண்டார். மீண்டும் 2001 முதல் 2005 முடிய கோயம்பத்தூர் நல்லாயன் குருத்துவக் கல்லூரியில் இறையியல் பயின்றார்.

## குருப்பட்டம் மற்றும் பணிகள்

தந்தை அவர்கள் 05-05-2004ல் திருத்தொண்டராக பட்டம் பெற்றார். 03-05-2005 ஆம் ஆண்டு பேராயர் மேதகு அந்தோணி ஆனந்தராயர் ஆண்டகை அவர்களால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

அதன்பின் 9-7-2005 முதல் 30-6-2006 முடிய நெல்-தோப்பு பங்கின் உதவி குருவாகவும், 1-7-2006 முதல் 4-6-2007 முடிய காரைக்கால் பங்கின் உதவி குருவாகவும் பணியாற்றினார். 5-6-2007 முதல் 12-6-2010 முடிய முன்னூர் பங்கு குருவாகவும், 13-6-2010 முதல் 1-6-2013 முடிய நீலவே-பண்ணையின் மேலாளராகவும், 21-7-2013 முதல் 2014 முடிய நெய்வே- - இந்திரா நகர் புதிய பங்கின் முதல் பங்கு குருவாகவும் பணியாற்றினார். 10-6-2014 முதல் 2019 முடிய கல்லேரி பங்குகுருவாகவும், 2019 முதல் மணலூர்பேட்டை பங்குகுருவாகவும் சிறப்பாக பணி செய்து வந்தார்.

கடந்த 13-10-2020 அன்று கொரோனா நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்டு வேலூர் C.M.C.மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். தொடர் சிகிச்சையில் இருந்த அருட்தந்தையின் உடல்நிலை 23.10.2020 அன்று மிகவும் பாதிக்கப்பட்டதாக மருத்துவர்கள் அறிவித்தனர். தொடர் தீவிர கண்காணிப்பு அவருக்கு அளிக்கப்பட்டது. ஆனாலும் அவருடைய உடல் நலன் முன்னேற்றம் அடையவில்லை. 26-10-2020 அன்று விடியற்காலை 5.35 மணியளவில் அருட்தந்தை அவர்கள் இறைவனடி சேர்ந்தார். அன்று மாலை 6.30 மணியளவில் அருட்தந்தையினுடைய உடல் பேராலயத்தில் உள்ள குருக்கள் கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அருட்தந்தை ஜெயசீலன் அவர்களுக்கு 28-10-2020 அன்று காலை 11 மணியளவில் பேராயர் தலைமையில் நினைவுத் திருப்ப-, புனித ஜென்ம ராக்கினி அன்னை பேராலயத்தில் நிறைவேற்றப்பட்டது.

திருப்ப-யின் முன்னுரையில் அருட்பணி ஜோசப்ராஜ் அவர்கள், அருட்தந்தை அமைதியானவர், அதிர்ந்து பேசாதவர், எல்லோரோடும் இனிமையாகப் பழகக் கூடியவர். அவர் எளிமையானவர், இறைவனோடு நல்ல உறவிலே வாழ்ந்தவர். அவர் 44 வயதில் நம்மை விட்டுப் பிரிந்தது நமக்கு வருத்தம் அளிக்கின்றது. அதைவிட மிகுந்த வருத்தம் அளிக்கக்கூடிய செய்தி என்னவென்றால் அவருடைய தந்தை கடந்த 13 தேதி கொரோனா நோயினால் இறந்தார். அவருடைய இறுதிச் சடங்கில் இவரால் பங்கெடுக்க முடியாத சூழல். காரணம், இவரும் கொரோனா நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவர் கடந்த 26ம் தேதி நம்மை விட்டு இறைவனடி சேர்ந்தார். அருட்தந்தை அவர்கள், தான் பணிபுரிந்த இடங்களிலே திருச்சபையைக் கட்டியெழுப்பும் மாபெரும் பணியைச் சிறப்புடன் செய்தார். அவர் பணியை முன்னிட்டு இறைவன் அவருக்கு வான் வீட்டில் அவருக்கு சிறப்பான இடம் அளிக்க வேண்டுவோம் என்றார்.

மறையுரையில் தந்தையினுடைய வகுப்புத் தோழர் அருட்பணி ஆல்பர்ட் அவர்கள், கனத்த இதயத்தோடு கடவுளின் பிரசன்னத்தில் நாம் ஒன்றாகக் கூடியிருக்கிறோம். அருட்தந்தை ஜெயசீலன் அவர்களுக்காக செபிக்கின்ற இவ்வேளையில் அவருடைய அன்புத் தந்தை மைக்கேல் அவர்களுக்காகவும் செபிக்கிறோம். ஒரு சில கேள்விகளுக்கு நம்மால் விடை கொடுக்க முடியாது. தன்னுடைய அன்பு மகனையும், கணவனையும் இழந்து தவிக்கும் தாயின் உள்ளம், ஏன் இப்படிப்பட்ட வேதனை? என்ற கேள்வியைக் கேட்கிறது. நம்முடைய உடனிருப்பையும் செபங்களையும் இந்த நேரத்தில் அவருடைய தாய்க்கும் உறவுகளுக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

சபை உரையாளர் கூறுவார். "ஒன்றின் தொடக்கமல்ல, அதன் முடிவே மேன்மையானது" என்று. இதுவே நம்முடைய ஆழமான கிறிஸ்தவ நம்பிக்கை. புனித பவலடியார் கூறுகிறார், "இறப்பு என்பது எனக்கு ஆதாயமே" என்று. காரணம் ஆண்டவரோடு கொண்டிருந்த உறவு. உடனிருப்பு அவரை இப்படிக் கூற வைத்தது. கிறிஸ்துவை நிறைவாகப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஆணித்தரமாக உணர்வுப்பூர்வமாக பெற்றுக்கொள்ள வேண்டுமென்பது அவருடைய ஆவல். தந்தை ஜெயசீலன் அவர்கள் அன்பானவர், அமைதியானவர், அன்னை மரியா மீது மிகுந்த பக்தி கொண்டவர். ஏழைகளுக்கு இரங்கும் பண்பு கொண்டவர். 23ம் தேதி மாலை வரை அவரோடு பேசிக்கொண்டிருந்தேன். விரைவில் வந்துவிடுவேன் என்று கூறினார். ஆனால் அவரை இறைவன் வெகு விரைவில் எடுத்துக்கொண்டார் என்று கூறினார்.

திருப்ப-யின் இறுதியில் பேராயர் அவர்கள், இந்த நேரம் நம் அனைவருக்கும் விசுவாசத்தின் நேரமாக அமைய வேண்டும். கடந்த சில நாட்களில் நடந்த மரணங்கள் நம்மிடையே பல கேள்விகளை எழுப்புகின்றன. அவை அனைத்திற்கும் நம்முடைய விசுவாச வாழ்வின் வழி பதில் அளிக்க அழைக்கப்படுகின்றோம்.

அருட்தந்தை ஜெயசீலன் அவர்கள் இயேசுவின் அடிச்சுவடுகளை இந்த உலகில் பின்பற்றி நடந்தவர். ஆழ்ந்த விசுவாசம் நிறைந்த இருதயம்பட்டு பங்கில் திரு. மைக்கேல், திருமதி தெரசம்மாள் என்ற விசுவாசமுள்ள பெற்றோருக்குப் பிறந்த இவரை நம்முடைய மறைமாவட்டத்தின் மேய்ப்புப் பணிக்காக காணிக்கையாகக் கொடுத்தார்கள். அவர்களுக்கு நம் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். தந்தை அவர்களை எங்கு பணிசெய்ய அனுப்பினாலும் அவர் மகிழ்ச்சியோடு சென்றார். அவர் திறந்த உள்ளம் கொண்டவராக இருந்தார். இவருடைய ஆழ்ந்த ஆன்மிகம், செப வாழ்வு, இயேசுவோடு கொண்டிருந்த உறவு இவரை சிறப்பாகப் பணி செய்ய வைத்திருக்கிறது. செபத்தின் வழியாக மட்டுமே நாம் இயேசுவோடு நிரந்தரமாக உறவை ஏற்படுத்திக்கொள்ள முடியும். எனவே நாம் தொடர்ந்து அவருக்காகச் செபிப்போம். இறந்தவர்கள் தங்களுக்கென்று எதையும் செய்ய முடியாது. அவர்களுக்காக நாம் செய்ய வேண்டியது செபம் மட்டுமே. அவருடைய வாழ்வு இறைவனுக்கென்று அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு. எனவே, அருட்தந்தைக்காக நாம் தொடர்ந்து மன்றாடுவோம் என்று கூறினார்.

சென்ற வாரத் தொடர்ச்சி 8

# கிறிஸ்தவக் குறியீடுகளும் அடையாளங்களும்

அருள்திரு. A.ஆரோக்கியராஜ், முதல்வர்,விரியூர்.

## 4.1. தமத்திருத்துவமும் அடையாளங்களும்



கிறித்தவத்தின் அடிப்படை போதனைகளில் ஒன்று தமத்திரித்துவம். திரித்துவ உண்மை தொடக்க காலம் தொட்டே குறிப்பாக, நிசேயா பொதுச்சங்கம் (325) காலம் முதல் மிகவும் சரியாக விளக்கப்பட்ட ஒரு மறையுண்மையாக விளங்கினும் இதனைப்பற்றிய குறியீடுகள் மற்றும் அடையாளங்கள் மிகக் குறைவாகவே இருந்திருக்கின்றன. முதல் 9 நூற்றாண்டுகளில் பெரிய அளவில் இந்த மறை உண்மையின் அடையாளங்களைப் பொருத்தமட்டில் எந்தவித முன்னேற்றமும் நிகழவில்லை. அதன்பிறகு பலகட்ட வளர்ச்சியை இது சந்தித்துள்ளது. 12ஆம் மற்றும் 13ஆம் நூற்றாண்டுகள்வரை தந்தைக்கு கரம், இயேசுவுக்கு ஆட்டுக்குட்டி மற்றும் தூயஆவியாருக்கு புறா பயன்படுத்தப்பட்டு வந்தன. இரண்டாம் கட்ட வளர்ச்சியில் திருத்துவத்தின் மூன்று ஆட்களையும் மனித உருவில் வெவ்வேறு வயதுடையவராக காண்பித்தனர். மூன்றாம் கட்ட வளர்ச்சியில் ஒரே உட-ல் மூன்று தலைகள் அல்லது ஒரே தலையில் மூன்று முகங்கள் உடையவர்களாக சித்தரிக்கப்பட்டனர். ஆனால் 8ஆம் உருபன் என்ற திருத்தந்தை 1628 ல் இதனை தடை செய்தார்.

தமத்திருத்துவத்தை விளக்க ஒருசில அடையாளங்கள்

1) சமபக்க முக்கோணம்
2) மூவிதழ் ஓரிலை வடிவம் (Shamrock)
3) ஒன்றோடொன்று இணைந்த சம அளவு வட்டங்கள்
4) திருத்துவ சூத்திரம்

### 1) சமபக்க முக்கோணம்:

முக்கோணத்தின் மூன்று பக்கங்களும் சரியாகவும், சமமாகவும், சம கோணத்துடனும் அமைந்திருப்பது சமபக்க முக்கோணம். இந்தப் பண்புகளை நாம் தமத்திருத்துவத்தோடு ஒப்பிடும்போது ஒவ்வொரு பக்கமும் தமத்திருத்துவத்தின் ஒவ்வொருவருக்குமான முழுமையான மற்றும் சமமான ஒரே ஞானம், ஒரே சித்தம், ஒரே வல்லமை, ஒரே தெய்வ சுபாவம் ஆகியவற்றைக் குறிக்கும் விதமாகவும், மூவரும் சேர்ந்து ஒரே இறைவனாக இருக்கின்றார்கள் என்பதையும் விளக்குகின்றது. எனவே இந்த அடையாளம்தான் தொடக்க காலம் தொட்டு பலரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.



### 2) மூவிதழ் ஓரிலை:

கி.பி 5 ஆம் நூற்றாண்டில் அயர்லாந்து நாட்டில் கிறித்தவத்தை போதித்தவர் புனித பேட்ரிக். ஒருநாள் அந்நாட்டு மன்னன் ஆர்த்ரிக்கு போதிக்கையில் அவர் தமத்திருத்துவத்தைப் பற்றி எடுத்துக்கூறினார். மன்னர் ஆர்த்ரி புனிதரைப் பார்த்து எப்படி ஒரே கடவுள் மூன்று ஆட்களாக இருக்க முடியும்? என்று வினவினார். அப்போது புனித பேட்ரிக் அங்கு விளைந்திருந்த சாம்ராக் (Shamrock) என்ற செடியை எடுத்துக்காட்டி இது மூன்று இலையா? ஓரிலையா? என்று கேட்டார். மன்னன் பதில் தெரியாமல் திகைத்தார். புனிதர் அரசனிடம் "இதில் மூன்று இலைகள் உள்ளன ஆனால் இது ஓர் இலையாகத்தான் கருதுகிறோம். அதுபோலவே கடவுள் மூன்று ஆட்களாக இருந்தாலும் ஒரே இறைவனாக இருக்கிறார்கள்" என்றார்.





திரித்துவத்தை விளக்கப் பயன்படுத்தப்பட்ட மற்றொரு அடையாளத்தில் தந்தை இறைவன் தலையில் கிரீடம் அணிந்து மேன்மை மிக்கவராக அமர்ந்திருக்கும் நிலையில் அவருடைய கரத்தில் மிகப்பெரிய சிலுவையை தாங்கியிருப்பார். அதில் இயேசு அறையப்பட்ட நிலையில் இருக்க தூய ஆவியார் புறாவடிவில் சிலுவையின் நுனியில் அமர்ந்திருப்பார்.

### 3) ஒன்றோடொன்று இணைந்த சம அளவு வட்டங்கள்

13 ஆம் நூற்றாண்டில் திரித்துவ அடையாளத்தில் புதிய வளர்ச்சி ஒன்றோடொன்று இணைந்த சம அளவு வட்டங்கள். வட்டத்திற்கு துவக்கமும் இல்லை முடிவும் இல்லை. இறைவனுக்கும் துவக்கமும் இல்லை முடிவும் இல்லை. ஒவ்வொரு வட்டமும் திரித்துவத்தின் ஓர் ஆளைக் குறிக்கின்றது. மூன்று வட்டங்களும் ஒன்றோடொன்று பின்னிய நிலையில் ஒரு புதிய உருவாக தமத்திருத்துவத்தின் மூவரையும் அவர்கள் துவக்கமும் முடிவும் இல்லாதவர்கள் என்பதையும், சம வல்லமையுடையவர்கள் என்பதையும் குறிக்கின்றது. உலகைப் படைத்த தந்தையாம் இறைவன் மகன் இயேசுவால் வெளிப்படுத்தப்பட்டு, தூய ஆவியார் வழியாய் இன்றும் பூமியில் செயலாற்றிக் கொண்டிருக்கிறார்.

### 4) திருத்துவ சூத்திரம்




இது [illegible] ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு குருத்துவ இறையியல் சூத்திரம். இதனை அடையாளம் என்பதைவிட சூத்திரம் என்று கூறுவதே சிறந்தது. முக்கோண வடிவில் அமைந்த இந்தச் சூத்திரத்தில் மூன்று முனைகளில் ஒளிவட்டங்களும் அதில் தந்தை, மகன், தூய ஆவியாரைக் குறிக்கும் Father, Son, Spirit என்ற வார்த்தைகள் உள்ளன. முக்கோணத்தின் மையத்தில் கடவுள் என்ற ஆங்கில வார்த்தை GOD உள்ளது. GOD என்ற மையத்தை மூன்று முனைகளில் உள்ள ஒளிவட்டங்களோடு இணைக்கும் கோட்டில் IS என்னும் "இருக்கிறார்" (நாமே இருக்கிறவர்) என்றும், மூன்று முனைகளை ஒன்றோடொன்று இணைக்கும் கோடுகளில் இல்லை என் பொருள்படும் IS NOTம் குறிக்கப்பட்டிருக்கிறது. இதன் வழியாக




1) தந்தை, மகன், தூய ஆவியார் மூவரும் இணைத்து ஒரே கடவுள் என்றும்,

2) தந்தை, மகன் இல்லை, மகன், தூய ஆவி இல்லை தூய ஆவி, தந்தை இல்லை என்றும் மேலும் இதனையே பின்னூடாக (Reverse) சொல்லும் போதும் அதே உண்மையையும்

3) தந்தை கடவுளாக இருக்கிறார், மகன் கடவுளாக இருக்கிறார், மற்றும் தூய ஆவியார் கடவுளாக இருக்கிறார். என்று அவர்களின் தனித்தன்மையையும் எளிதாக விளக்குகின்றது.

அறிவோம் தொடர்ந்து

Published and Printed by Very Rev. Msgr. A. Arulanandam on behalf of Most Rev. Dr. A. ANANDARAYAR, D.D.,D.C.L., Archbishop of Pondicherry & Cuddalore. Printed at Mission Press, 196, Cathedral Street, Puducherry - 605 001. Published from Mission Press, 196, Cathedral Street, Puducherry-605 001. Editor: Very Rev. Msgr. A. Arulanandam. Manager : Very Rev. Msgr. A. Arulanandam.